©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 336] CHENNAI, MONDAY, NOVEMBER 1, 2010
Aippasi 15, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

#### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர் அரியலூர்.**

**அரியலூர் மாவட்டம், தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், காசாங்கோட்டை கிராம ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

(*ந.க. எண் 2740/2009/அ3.*)

**No. VI(2)/506(a-1)/2010.**

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், காசாங்கோட்டை கிராம ஊராட்சிமன்றத் துணைத்தலைவர் திரு. எஸ். வேலுசாமி என்பவர் விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டு ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட உறுதுணையாக இருந்ததன்பேரில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 206—ல், மாவட்ட ஆட்சித்தலைவர்/ ஊராட்சிகள் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, அரியலூர் மாவட்டம், தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், காசாங்கோட்டை கிராம ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் திரு. எஸ். வேலுசாமி என்பவரை, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 206—ன்கீழ் வரையறுக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி, காசாங்கோட்டை கிராம ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் பதவியிலிருந்து, இவ்வறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நீக்கம் செய்து அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

**அரியலூர் மாவட்டம், தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், காசாங்கோட்டை கிராம ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

(*ந.க. எண் 2740/2009/அ3.*)

**No. VI(2)/506(a-2)/2010.**

அரியலூர் மாவட்டம், தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், காசாங்கோட்டை கிராம ஊராட்சி மன்றத் தலைவர் திரு. க. முனியன் என்பவர் விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டு ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டதன்பேரில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (1994 ஆம் ஆண்டின் 21—வது சட்டம்) பிரிவு 205 உட்பிரிவு (11)—ல், மாவட்ட ஆட்சித் தலைவர்/ஊராட்சிகள் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, அரியலூர் மாவட்டம், தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், காசாங்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் திரு. க. முனியன் என்பவரை, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 205—ன்கீழ் வரையறுக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி, காசாங்கோட்டை கிராம ஊராட்சிமன்றத் தலைவர் பதவியிலிருந்து, இவ்வறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நீக்கம் செய்து அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

**அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், ஜெ. தத்தனூர் கிராம ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

(*ந.க. எண் 3159/2009/அ3.*)

**No. VI(2)/506(a-3)/2010.**

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், ஜெ. தத்தனூர் கிராம ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சி. சாமிதுரை என்பவர் விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டு, ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியதன்பேரில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (1994 ஆம் ஆண்டின் 21—வது சட்டம்) பிரிவு 205 உட்பிரிவு (11)—ல், மாவட்ட ஆட்சித்தலைவர்/ஊராட்சிகள் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், ஜெ. தத்தனூர் கிராம ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சி. சாமிதுரை என்பவரை, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 205—ன்கீழ் வரையறுக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி, ஜெ. தத்தனூர் கிராம ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து, இவ்வறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நீக்கம் செய்து அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அரியலூர்,
2010 அக்டோபர் 30.

**தி.க. பொன்னுசாமி,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது